# தேவன் உங்களிடம் எதைக் கேட்கிறார்?

## உறவுமுறையிலான சபையில் வாழ்தல், X

Wayne Jacobesen



இயேசு உங்களிடம் எதையோ கேட்கிறார் என்ற உணர்வு கொஞ்ச நாட்களாகவே உங்களுக்குள் இருக்கிறது. அந்த உணர்வு எல்லா நேரமும் உங்களைத் தொந்தரவு செய்வதில்லை. ஆனால், பெரும்பாலும் ஏதாவது நிகழும்போது, அல்லது யாராவது எதையாவது சொல்லும்போது, அது உங்கள் நினைவைத் தூண்டிவிட்டி, அந்த உணர்வை மீண்டும் உங்கள் கவனத்துக்குக் கொண்டுவருகிறது. உடனே, உங்கள் இருதயத்தில் ஓர் ஆழமான கிளர்ந்தெழுதலை அனுபவிக்கிறீர்கள்; அது என்னவாக முடியுமோ என்பதைக்குறித்துப் பரவசமும் அடைகிறீர்கள். ஒருவேளை, நீங்கள் இதை வாசித்துக்கொண்டிருக்கையில் இபோதே அந்த எண்ணம் உங்களுக்குள் எழக்கூடும்.

ஆனால், 21ஆம் நூற்றாண்டு வாழ்க்கையின் அன்றாட கோரிக்கைகள் அந்த உணர்வை விழுங்கிவிடுவதால், அது பெரும்பாலும் அவ்வளவு சீக்கிரத்தில் மங்கிப்போகிறது. வேலை செய்யும் இடத்தில் உள்ள பொறுப்புகள், வீட்டு வேலைகள், குடும்பத்தின் தேவைகள், வாழ்க்கையின் பரபரப்பான மற்ற வேலைகள் நம் நாளை ஆக்கிரமித்துக்கொள்கிறது; நாமும் ஒரு வேலையிலிருநது இன்னொரு வேலைக்குத் தாவிக்கொண்டேயிருக்கிறோம், இவ்வாறு, நம் கடமைகளை நிறைவேற்றுவது ஏறக்குறைய நம் நேரத்தையெல்லாம் எடுத்துக்கொள்கிறது. எல்லா வேலைகளையும் செய்துமுடித்தபிறகு நாம் முழுவதும் சோர்வடைந்துவிடுகிறோம். எஞ்சியிருக்கும் நேரத்தில் கொஞ்சம் பொழுதுபோக்குக்காக மட்டுமே நம் பலத்தைச் செலவழிக்க முடிகிறது. அதன்பின் படுக்கைக்குச் செல்கிறோம். அடுத்த நாள் காலையில் நாம் மீண்டும் நம் தறிகெட்ட ஓட்டத்தை ஆரம்பித்துவிடுகிறோம்.

இதுவே ஆவிக்குரிய தேக்கத்தின் சுழற்சி. இதனால் நம்மில் யாரை வேண்டுமானாலும் கண்ணியில் சிக்கவைப்பதுபோல் சிக்கவைக்க முடியும். ஒவ்வொரு நாளும் நம் வாழ்க்கையில் இயேசு செய்கிற வேலையின் சாகசத்திலும், குறிக்கோளிலும் வாழ்வதற்குப்பதிலாக, உலகம் யோசிப்பதுபோல் நாமும் யோசித்து, அன்றாடம் தாக்குப்பிடித்து வாழ்ந்தால் போதும் என்பதில் நாம் கவனம் செலுத்த ஆரம்பித்துவிடுகிறோம். அப்படி நடக்கும்போது, வேலைகள், வீடுகள், நடவடிக்கைகள் ஆகியவைகளால் நாம் ஆக்கிரமிக்கப்பட்டு மீண்டும் உலகத்தின் ஒரு பகுதியாகிவிடுகிறோம். அப்போது, நாம் அதைவிட ஒரு பெரிய இராஜ்ஜியத்தின் ஒரு பகுதி என்ற உணர்வை இழந்துவிடுகிறோம். கடமைகள், பாரம்பரியங்கள், நாம் பின்பற்ற வேண்டும் என்று மற்றவர்கள் நம்மிடம் சொன்ன மாதிரிச்சட்டங்கள் ஆகியவைகளுக்காக இயேசுவின் என்றும்-உள்ள குரலைக் கேட்கத் தவறுவதால், நம் ஆவிக்குரிய பேரார்வம்கூடப் பறிபோய்விடுகிறது.

நாம் வறட்சியான நேரத்தில் சிக்கிக்கொண்டோம் என்றும், தேவனுடைய பிரசன்னம் நம்மைக் கடந்து சென்றுவிட்டது என்றும் நாம் நினைக்கிறோம். இது நிச்சயமாக உண்மை அல்ல.

***குவிமையம்!***

எப்போதும்போல், அவர் உங்கள் இருதயத்தின் ஆழத்தில் இருந்துகொண்டு, தம்மோடு சேர்ந்து வர உங்களை அழைக்க, தம்மால் இயன்ற எல்லாவற்றையும் செய்துகொண்டிருக்கிறார். உங்கள் பயணத்தில் நீங்கள் எடுக்க வேண்டிய அடுத்த படியை அவர் உங்களுக்குத் தொடர்ந்து வழங்கி, அதை நீங்கள் பின்பற்றுவதற்காக உங்களுக்காகக் காத்திருப்பார். எனவேதான், அவர் பேசும்போது அதை உணர்ந்துகொள்கிற, எப்படி என்று அவர் காண்பிக்கும்போது அதைப் பின்பற்றிச் செல்லும் நோக்கம் கொண்ட, இருதயத்தை நாம் பண்படுத்த வேண்டியது முக்கியமாகும். இப்படித்தான் நாம் அவரில் வாழ்கிற சாகசத்தில் தொடர்ந்து சென்று, நம்மைத் தன் அச்சில் அழுத்துகிற உலகத்தின் முயற்சிகளுக்குத் தப்பித்துக்கொள்கிறோம்.

தம் சீடர்கள் தம் வழிகளைப் பின்பற்றும்போது, அவர்கள் தம் அன்பில் தொடர்ந்து வளர்வார்கள் என்று இயேசு அவர்களிடம் கூறினார். “நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு, அவருடைய அன்பிலே நிலைத்திருப்பதுபோல, நீங்களும் என் கற்பனைக் கைக்கொண்டிருந்தால், என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள்” (யோவான் 15:10). அவர் இங்கு நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வதைப்பற்றிப் பேசவில்லை. மாறாக, ஒவ்வொரு நாளும் தம் பிதாவானவர் செய்யத் தாம் கண்டதைச் செய்வதைப்பற்றிப் பேசுகிறார். இயேசு நம்மை நடத்துவதும், நம்மால் முடிந்த அளவுக்கு அதைப் பின்பற்றுகிற தீர்மானங்களும் இல்லையென்றால், இந்த இராஜ்ஜியத்தில் ஜீவனோ, பேரார்வமோ, மகிழ்ச்சியோ இல்லை. அவர் உங்களை எல்லாச் சூழ்நிலைகளின் வழியாகவும் நெறியறிந்து நடத்திச் செல்லுகிற குரலாகவும், பிரச்சினை

யின்போது உங்கள் இருதயத்தை இளைப்பாறச் செய்கிற சமாதானமாகவும், கடும்புயலில் உங்களைத் தாங்குகிற வல்லமையாகவும் இருக்க விரும்புகிறார்.

இப்போது அவர் உங்களிடம் எதைக் கேட்கிறார்? அது ஒருவேளை ஒரு நல்ல விருந்தை ஆயத்தம்பண்ணி, பக்கத்து வீட்டுக்குக் கொண்டுசென்று அவர்களுடன் பரிச்சயம் கொள்கிற ஓர் எளிமையான காரியமாக இருக்கக்கூடும், அல்லது இந்த உலகத்தில் அவருடைய இராஜ்ஜியத்தை விரிவாக்க உதவ தேவன் உங் களுக்குத் தந்திருக்கும் கொடையைப் பயன்படுத்துகிற வாழ்க்கையை மாற்றுகிற ஒரு காரியமாக இருக்கக் கூடு;ம. ஒருவேளை, நீங்கள் வேலை செய்யும் இடத்தில் மதிய உணவுக்குப்பின் ஒரு பாடம் ஆரம்பிக்க, அல்லது உங்களருகே இருக்கும் சகோதர சகோதரிகள் சமுதாய வாழ்க்கை வாழ இன்னும் முனைப்பான வழிகளைக் கண்டுபிடிக்க அவர்களுக்கு உதவ அவர் உங்களை உற்சாகப்படுத்தக்கூடும். தேவையில் இருக்கும் ஒருவருக்குப் பணம் கொடுக்க வேண்டும் என்றோ, முறிந்துபோன உறவை சீர்செய்ய கதவைத் திறக்க வேண்டும் என்றோ, அல்லது தேவன் ஏதோவொன்றைச் செய்யுமாறு அழைத்த ஒரு நபர் அதைச் செய்வதில் அவரோடு சேர்ந்து நடக்கவோ அவர் உங்களை அழைக்கக்கூடும். இதுபோன்று இலட்சக் கணக்கான சாத்தியக்கூறுகள் இருக்கலாம்!

***புறக்கணிக்குமாறு நமக்குக் கற்பிக்கப்பட்ட குரல்***

தேவன் இன்னும் தனிப்பட்ட நபர்களிடம் பேசுகிறார் என்ற கருத்தை உலகம் எள்ளி நகையாடுகிறது. நல்ல நோக்கம் கொண்ட சில விசுவாசிகள்கூட அப்படியே செய்கிறார்கள். இதற்காக நீங்கள் அவர்களைக் குற்றம் சாட்ட முடியாது. சில குறிப்பிட்ட காரியங்களைச் செய்ய வேண்டும் என்று தேவன் தங்களிடம் சொன்ன தாகப் பறையடித்துக்கொண்டு கேலிக்கூத்தான அல்லது அழிவுண்டாக்குகிற காரியங்களைச் செய்து கொண்டிருக்கிற பலரை ஒருவேளை நீங்கள் அறிந்திருக்கக்கூடும். தேவனுக்குச் செவிகொடுப்பதற்கு ஒரு கெட்ட பெயரை உண்டாக்குவதற்கு இது போதுமானது. மக்கள் கள்ள நோட்டைப் பயன்படுத்துகிறார்கள் என்பதால் நாம் நல்ல நோட்டைப் பயன்படுத்துவதை நிறுத்திவிடுவதில்லை. இயேசுவுக்குச் செவிகொடுத்து, அவரைப் பின்பற்றுவதற்கான சுதந்தரம் இயேசுவுக்குள்ளான நம் வாழ்க்கையின் மையத்தில் உள்ள காரியம். இந்த வாழ்க்கை இனிமேல் சட்டங்களைப் பின்பற்றுவதைப்பற்றிய வாழ்க்கை இல்லை, மாறாக இயேசுவைப் பின்பற்றுகிற வாழ்க்கை என்று பவுல் ரோமர்களிடம் கூறினார். “நீங்கள் என்ன செய்ய வேண் டும் என்பதை அறிய நீங்கள் பாவத்துக்குச் செவிகொடுக்க வேண்டிய தேவையில்லை எனபதை இப்போது நீங்கள் கண்டுபிடித்திருக்கிறீர்கள். மாறாக, நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை அறிய தேவனுக்குச் செவிகொடுக்கிற இன்பத்தை நீங்கள் கண்டுபிடித்திருக்கிறீர்கள். என்னே ஆச்சரியம்! முழுமையான, குண மடைந்த, ஒன்றாக இணைந்த ஜீவன் இப்போது உங்களுக்குக் கிடைத்திருக்கிறது. இன்னும் அதிமாக வந்துகொண்டிருக்கிறது” (ரோமர் 6:22).

நாள் முழுவதும் தேவனோடு சேர்ந்து யோசிக்கக் கற்றுக்கொள்ளுவது கிறிஸ்துவின் ஜீவனின் உயர் மட்ட நிலையோ, விசேஷமானவர்களுக்கு மட்டுமே என்றோ இல்லை. இது இயேசு நமக்காக விலைகொடுத்து வாங்கிய ஜீவனின் அடிப்படையான, கடைமட்ட நிலையாகும். அவர் நம்மை உந்தித்தள்ளுகிறார் என்பதை உணர்ந்து, அவரைப் பின்பற்றி, எல்லாச் சம்பவங்களிலும் எப்படி யோசிக்க வேண்டும் என்றும், அவருடைய ஞானத்தையும், இருதயத்தையும் கொண்டு எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்றும் நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டும் என்று அவர் விரும்புகிறார். நாம் ஒவ்வொருவரும் அவரைஅறிய முடியும் என்றும், எனவே நாம் என்ன செய்ய வேண்டும் என்று ஒருவனும் நமக்குச் சொல்ல வேண்டியதில்லை, அல்லது எது உண்மை அல்லது எது தவறு என்று ஒருவனும் நமக்காகத் தீர்மானிக்க வேண்டியதில்லை என்றும் புதிய ஏற்பாடு நமக்கு மீண்டும் மீண்டும் நினைவுபடுத்துகிறது (யோவான் 16:13; எபிரேயர் 8:11; 1 யோவான் 2:20, 27).

அவர் உங்களில் என்ன செய்துகொண்டிருக்கிறார்? இன்று அவர் உங்களிடம் என்ன கேட்கிறார்? என்னில் இருக்கிற தேவனுடைய ஜீவனின் ஒரு பகுதி என்ற முறையில் ஏறக்குறைய இன்று நான் ஈடுபட்டிருக்கிற எல்லாமே பல வருடங்களுக்குமுன்பு தேவன் என்னிடம் கேட்டதாக நான் உணர்ந்த சாதாரணமான செயல் களின் விளைவுகளேயாகும். அவைகளில் சில ஒருவரிடம் தொலைபேசியில் பேசுதல், என் மகள் படித்துக் கொண்டிருக்கும் பள்ளியியில் தன்னார்வத் தொண்டுசெய்தல், உறவுகளை உருவாக்க நேரம் செலவழித் தல், நான் சண்டை போட விரும்பின ஒரு சகோதரனோடு சண்டை போடாமல் விலகிச் செல்லுதல் போன்ற சிறிய காரியங்கள். நான் எடுத்த ஒவ்வொரு தீர்மானத்தினாலும் தொடர் விளைவுகள் ஏற்பட்டன; அவை திறந்த கதவுகள் என்னைத் திகைப்புக்குள்ளாக்கியிருக்கின்றன. அந்தக் காரியங்கள் கடைசியில் எப்படி முடியும் என்று நான் துல்லியமாக ஒருபோதும் முன்கூட்டியே பார்த்ததில்லை. ஆனால், சாதாரணமாகக் கீழ்ப்படியும்போது, அதனால் வரும் விளைவுகளைக் கண்டு நான் வியந்திருக்கிறேன்.

***வளர்ந்துகொண்டிருக்கிற உறுதிப்பாடு***

ஒருவரும் தவறாக நினைத்துவிடக் கூடாது என்று நான் விரும்புகிறேன். ஒவ்வொரு நாள் காலையிலும் நான் தேவனுடைய பாதத்தில் உட்கார்ந்து, “இதைச் செய் அல்லது அதைச் செய்” என்று தேவன் என்னிடம் சொல்வதை நான் கேட்கிறேன் என்பதல்ல இதன் பொருள். இது அப்படி முயன்று கண்டுபிடிக்கிற ஒன்றல்ல. பெரும்பாலான வேளைகளில், கொஞ்ச நாட்களாக என் இருதயத்தில் வளர்ந்துகொண்டிருக்கிற ஓர் உறுதிப்

பாட்டின்மூலாமாகவே தேவன் என்னிடம் பேசுகிறார். எல்லாரையும்போல, எனக்கும் கணநேரம் தோன்றி மறைகிற எண்ணங்களும், ஆசைகளும் வருகின்றன; ஆரம்பத்தில் அவைகள் தேவனுடையவைகளைப் போல் தோன்றலாம். ஆனால், கடைசியில் அவைகள் தேவனிடமிருந்து வரவில்லை, மாறாக என்னிட மிருந்தே வந்தன என்பது நிரூபணமாகிறது. இந்த வித்தியாசத்தை நான் எப்படி கற்றுக்கொள்கிறேன்?

வருகிற எண்ணங்களையும், ஆசைகளையும் கொஞ்ச ஆறப் போடுங்கள். விமானத்தில் பயணம் செய்யும் போது ஒருவரிடம் பேசுவதற்கு ஒரு வாய்ப்பு கிடைக்கிறது என்றால், இதைத் தள்ளிப் போட முடியாது. இப் படி உடனடியாகச் செயல்பட வேண்டிய காரியம் இல்லையென்றால், உறுதிப்படுத்துவதற்காக நான் சில நாட்களுக்கு அவைகளை அப்படியே விட்டுவிடுகிறேன். நான் இயேசுவோடு தவறாமல் நேரம் செலவழித்து, வேதாகமத்தை வாசிப்பதின் மூலமாகவும், மற்ற விசுவாசிகளின் ஆழ்ந்த சிந்தனைகளாலும் என் மனதைப் பக்குவப்படுத்தும்போது, காலப் போக்கில் தேவனுடைய நடத்துதல் மிகவும் தெளிவாகிறது என்பதை நான் கண்டுகொண்டேன். வளர்ந்துகொண்டிருக்கிற இந்த உறவு தேவனுடைய சத்தத்தை உலகத்தினுடைய வழிகளின் திசைதிருப்புதலுக்கும், வேதனைக்கும் மேலாக உயர்த்துகிறது.

நான் கேட்கிற எதுவாயிருந்தாலும் வேதவாக்கியங்களின் பொருளடக்கத்துக்கும், ஆவிக்கும் ஒத்திருக்கிறதா என்று நான் அளந்துபார்க்கிறேன். இது தேவன் தம்மை எப்படி வெளிப்படுத்தியிருக்கிறார் என்பதற்கும், எப்படி வேலைசெய்கிறார் என்பதற்கும் ஒத்திருக்கிறதா?

என் கவலைகளை மிக எளிதாகத் தீர்க்கிற பதில்களை நான் ஒருபோதும் நம்புவதில்லை. இராஜ்ஜியத்தின் சிந்தனைகளைச் சிந்திக்க நமக்குள்ள சுதந்தரத்தை கவலை என்னும் பேரலை அடித்துச்சென்று விடும் என்று மத்தேயு 6இல் இயேசு எச்சரித்தார். தேவன் நம்மேல் அக்கறை வைத்திருக்கிறார் என்பதை நம்பும் போது மட்டுமே அவருடைய வழிகளை அறிய நாம் போதுமான அளவுக்கு இளைப்பாறுதலோடு இருக்க முடியும்.

குற்ற உணர்ச்சிக்கு நான் செவிகொடுப்பதில்லை. குற்ற உணர்ச்சி நம்மைத் தேவனுடைய ஞானத்தை விட்டு விலக்கிச் செல்லுகிறது. கடைசியாக சில சோதனைகளை நிறுத்தும்போது அல்லது இன்னும் கொஞ் சம் கட்டுப்பாட்டுடன் நடக்கும்போது மட்டுமே தேவன் தங்களை நடத்துவார் என்று அநேகர் நினைக்கிறார்கள். அவர்கள் தலைகீழாகப் புரிந்துகொண்டிருக்கிறார்கள். நாம் நம் மாம்சத்தைத் தேவனுடைய வழிகளுக்கு ஒத்ததாக்க முடியாது. மாறாக, தேவனுடைய பிரசன்னமும், ஆழ்ந்த சிந்தனையும் நம் மாம்சத்தின் இடத்தை எடுத்துக்கொள்ளும்வரை, நாம் தேவனால் நடத்தப்பட முடியும்.

உங்கள் சொந்தத் திட்டம் என்ற கொடுங்கோலனை விட்டுவிடுவதற்கும் இது உதவும். நம் வாழ்க்கையில் இயேசு செய்ய வேண்டும் என்று நாம் விரும்புகிற காரியங்களும், அவைகளை அவர் எந்த வகையில் செய்ய வேண்டும் என்று நாம் விரும்புகிற விருப்பமும் நம்மெல்லாரிடமும் இருக்கின்றன. ஆனால், அவைகளைச் செய்வதற்கான மிகச் சிறந்த வழி நமக்குத் தெரியும் என்ற நம் துணிகரம், அவர் நம்மிடம் கேட்கிற வழியில் நாம் காரியங்களை எளிதே செய்யாதபடிக்குத் தடுத்துவிடும். பணிவிடை செய்வதின்மூலமாகவே நீங்கள் உயரத்துக்குப் போகிறீர்கள் என்றும், வரிசையில் முதலில் இருப்பவன் கடைசி வரிசையில் காணப்படுகிறான் என்றும் அவர்தான் நமக்குக் கற்றுத்தந்தார். அவர் விரும்புகிற வழியில், அவருடைய குறிக்கோளை உங் களில் நிறைவேற்ற அவரை நம்புவதற்கு நீங்கள் எந்த அளவுக்கு வளர்கிறீர்களோ, அந்த அளவுக்கு அவர் அதை எப்படி செய்கிறார் என்பதை உணர்வது உங்களுக்கு எளிதாக இருக்கும்.

உங்கள் இயலாமை உணர்வு நீங்கள் பின்பற்றாபடித் தடுக்க அனுமதிக்காதீர்கள். உங்கள் இயற்கையான மனதால் எல்லா நேரமும் அதைக் கணிக்க முடியாது. அவர் உங்களிடம் கேட்பதைச் செய்ய நீங்கள் தகுதி யுள்ளவர்களாக மாறிவிட்டதாக நீங்கள் உணரப்போவதில்லை. மாறாக, அவர் உங்களோடு வந்து, அதைச் செய்வதற்கு உங்களைப் பலப்படுத்துவார். உங்கள்மூலம் அவர் செய்துகொண்டிருக்கும் வேலையில் அவ ருடைய கரத்தைப் பார்ப்பதற்கு போதுமான தூரத்துக்கு நீங்கள் அவரைப் பின்பற்றினால் மட்டுமே நீங்கள் அதை அனுபவிப்பீர்கள்.

வழியில் நீங்கள் சில தவறுகள் செய்வீர்கள்; இந்த வழியில் நடந்துசெல்கிற யாரும் தவறுகளைத் தவிர்க்க முடியாது. என் வாலிப வயதில் நிச்சயமாக நான் தவறுகள் செய்தேன். இப்போதுங்கூட நான் தவறு செய் யாத பூரணமானவன் அல்ல. ஆனால், அவரைப் பின்பற்றக் கற்றுக்கொள்ளுவது, தேைச் சரியாகச் செய்வ திலிருந்து வருவதுபோல, நம் தவறுகளிலிருந்தும் வருகிறது. அனுபவம் தேவனுடைய ஆவியானவரின் கரங்களில் ஒரு மதிப்புவாய்ந்த கருவி.

வேறு யாரோ ஒருவரை ஏதோவொன்றைச் செய்ய வைக்குமாறு தேவன் உங்களிடம் சொல்கிறார் என்று நீங்கள் நினைக்கும்போது அதை எப்போதும் சந்தேகிக்க வேண்டும். தேவனைப் பின்பற்ற அவர் உங்களை நடத்துவார்; மற்றவர்களை அவரைப் பின்பற்ற வைக்குமாறு அவர் உங்களிடம் கேட்கமாட்டார். தம்மைப் பின்பற்றுமாறு தேவன் உங்களிடம் கேட்கும்போது, வேறு யாரோ அல்ல, மாறாக நீங்கள்தான் துணிந்து முடிவெடுத்து, அவரைப் பின்பற்றுவதற்கான விலைக்கிரயம் செலுத்த வேண்டும். அவர் ஏற்கெனவே மற்றவர்களிடம் சொல்லிக்கொண்டிருப்பதை உறுதிப்படுத்த அவர் நம்மைப் பயன்படுத்தக்கூடும். ஆனால்,

அவர் நம்மில் செய்துகொண்டிருப்பதற்கு நாம் உண்மையுள்ளவர்களாக இருக்க, அவர்களைத் தந்திர மாகக் கையாள வேண்டிய அவசியம் இல்லை.

***இப்போது, இது உங்கள் நேரம்...***

தேவன் தங்கள் இருதயத்தில் வைத்ததைப் பின்பற்ற வேண்டும் என்று மக்கள் மனவிருப்பத்துடன் தெரிந் தெடுப்பதால், தேவன் அவர்கள் வாழ்க்கையில் செய்துகொண்டிருக்கிற வியத்தகு காரியங்களை நான் வாராவாரம் கேள்விப்படுகிறேன். இப்படிப்பட்ட காரியங்களை நான் கேள்விப்படாத வாரங்கள் அபூர்வம். ஒரு பெண்மணி கடந்த வாரம் எனக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். “நீண்ட காலமாக என் பெற்றோர் என் னைத் தவறாக நடத்தினார்கள். இதன் விளைவாக ஆவிக்குரிய அடிமைத்தனம் ஏற்பட்டது. இப்போது நான் செய்ய வேண்டும் என்று தேவன் என்னிடம் கேட்பதை நான் சாதாரணமாகப் பின்பற்றுவதின்மூலம் அவர் என்னை அந்த அடிமைத்தனத்திலிருந்து வெளியே கொண்டுவருகிறார்,” என்று அவர் எழுதியிருந்தார். அவள் பின்பற்றுவதற்கு அவர் அவளுக்கு எளிமையான படிகளைக் கொடுத்திருக்கிறார். ஆனால், அந்த எளிமையான படிகள் அவள் வாழ்க்கையில் ஏற்படுத்திக்கொண்டிருக்கிற சுதந்திரம் வியக்கத்தக்கது. இயேசு வின் அன்பைக் கொண்டு எய்ட்ஸ் நோயாளிகளைக் கவனிக்கிற மக்களை எனக்குத் தெரியும். ஒரு பெண் ணின் ஒழுக்கங்கெட்ட முந்நாள் கணவன் அந்தப் பயங்கர வியாதியால் செத்துக்கொண்டிருக்கும்போது, “நீ திரும்பிப்போய், அவனைக் கவனி,” என்று தேவன் அந்தப் பெண்ணிடம் கூறினதில் இது ஆரம்பித்தது.

எனக்கு ஒருவரைத் தெரியும். அவர் பெரும்பாலும் பட்டணத்தின் ஒழுக்கங்கெட்ட பாடகர்குழுவில் பாடு கிறார். ஏனென்றால், அந்தப் பாடகர் குழுவின் மற்ற நபர்களுக்கு தேவனுடைய அன்பை விளங்கப்பண் ணும்படி தேவன் அவரிடம் சொன்னார். உலகம் முழுவதும் எனக்கு அநேகரைத் தெரியும்; அவர்கள் சேர்ந்து சாதாரணமாகத் தேவனுக்குச் செவிகொடுத்து, அவருடைய சத்தத்தைப் பின்பற்றுவதின்மூலம் புதிய ஏற்பாட்டு சமுதாயத்தின் வியத்தகு வெளியாக்கங்களைக் கண்டுகொண்டவர்கள். தேவன் நடத்திய தின் விளைவாக ஒருவர் தொலைபேசியில் பேசியதால், அல்லது நேரில் போய்ப் பார்த்துவிட்டு வந்ததால் ஆரம்பித்த ஆழமான, வாழ்க்கையை மாற்றின உறவுகள் உருவானது எனக்குத் தெரியும்.

இவைகளும், இவைகளால் விளைகிற கனியும், தேவன் அவர்கள் இருதயத்தில் வைத்த ஏதோவொன்றின் பகுதியாக இருக்க அவர்கள் தெரிந்தெடுத்த சிறுசிறு வியத்தகு தீர்மானங்களிலிருந்தே வந்தன. நம் இரு தயங்களில் வளர்ந்துகொண்டிருக்கிற உறுதிப்பாட்டுக்குக் கீழ்ப்படிய நாம் தயாராக இருக்கும்போது, நம் வாழ்க்கையில் வெளியரங்கமாகும் காரியங்கள் வியப்பாக இருக்கின்றன.

தேவன் உங்கள் இருதயத்தில் எதை வைத்திருக்கிறார்? நீங்கள் அதைப் பார்க்கத் தவறிவிட்டீர்களோ என்று அவரிடம் கேட்க, கொஞ்சம் நேரம் செலவழியுங்கள். அடுத்த சில நாட்களில் எதுவும் தெளிவாகாவிட்டால், அதனால் சோர்ந்துபோகாதீர்கள். இப்போது, ஒருவேளை, நீங்கள் எதையாவது செய்ய வேண்டும் என்று அவர் விரும்புவதைவிட அவர் உங்களையே அதிகமாக விரும்பக்கூடும். சும்மா அவர்மேல் சாய்ந்துகொள் ளுங்கள். உங்கள் உறவு ஆழமாகும்போது, அவர் உங்களுக்கு எதையாவது தெளிவாக்குகிறாரா என்பதை விழிப்புடன் கவனியுங்கள். அதன்பின் அதைச் செய்யுங்கள்.

அது மிகவும் சிறியதாகவும், முக்கியம் இல்லாததாகவும், உங்கள் நேரத்தையோ, அல்லது கவனத்தையோ ஈர்ப்பதற்குத் தகுதியற்றதாகவும் தோன்றக்கூடும். ஆனால், இயேசு உங்களுக்குமுன் வைத்திருக்கிற அடுத்த படியை நீங்கள் எடுக்காதவரை, அவரைப் பின்பற்றுவதின் பொருள் என்னவென்பதையோ, அல்லது அவர் உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிற மகிமையையோ நீங்கள் ஒருபோதும் அறியமாட்டீர்கள். கீழ்ப்படிந்து ஒரு சிறிய படி எடுத்து வைக்கும்போது அது எங்கு நடத்திச் செல்லும் என்று நீங்கள் ஒருபோதும் அறியமாட்டீர்கள்.




***ஃபேர்லியிலுள்ள அந்தக் கூட்டம்***

இந்தக் கோடையில் சாராளும், நானும் நியூசிலாந்து தேசமெங்கும் உள்ள விசுவாசிளைச் சந்தித்தோம். செய்ய வேண்டும் என்று இயேசு தங்கள் இருதயத்தில் வைத்ததை ஒரு கூட்டம் மக்கள் சாதாரணமாகப் பின்பற்றியபோது என்ன நடந்தது என்ற வியக்கத்தக்க கதையை இங்கு சுருக்கமாகக் கூறுகிறேன். அவர்

எல்லாரையும் ஒரே விதமாக நடத்த மாட்டார். ஆனால், அவருடைய நடத்துதலை இவர்களால் எப்படி சேர்ந்து பின்பற்ற முடிந்தது என்பதை நீங்கள் நேசிக்க வேண்டும்.

ஃபேர்லி என்பது நியூசிலாந்தின் தெற்குத் தீவின் மத்தியில் இருக்கிற ஒரு சிறிய விவசாயக் கிராமம். கடந்த இரண்டு வருடங்களாக நான் கொஞ்சம் விசுவாசிகளைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்தேன். இவர்கள் மதரீதி யான ஓர் அமைப்புமுறையின் ஒரு பகுதியாக இருந்தார்கள். ஆனால், உலகத்தின் இந்தப் பகுதியில் ஒன் றாகச் சேர்ந்து கிறிஸ்துவின் சரீரமாக வாழ தேவன் அவர்களை இந்த அமைப்புமுறையை விட்டு வெளியே நடத்தினார். 1986ஆம் வருடம். ஒன்றாகச் சேர்ந்து வாழ்வதை கட்டுப்படுத்தி நெருக்கிக்கொண்டிருந்த அமைப்புமுறைகளைக் கைவிடுமாறு தேவன் தங்களிடம் கேட்டுக்கொண்டிருப்பதுபோல அதின் சில தலை வர்கள் உணர்ந்தார்கள். இந்த அமைப்புமுறைகளில் நிறுவனம் மட்டும் அல்ல, அவர்கள் கூடிவந்த கட்டிட மும் அடங்கும். சில வாரங்கள் ஒன்றாகச் சேர்ந்து ஜெபித்து, இந்த நடத்துதலைப் பரிசீலித்தபிறகு, இதைத் தான் தேவன் தங்களிடம் சொல்லிக்கொண்டிருக்கிறார் என்பதை அவர்களெல்லாரும் ஒருமனமாக ஒப்புக்கொண்டார்கள்.

அவர்கள் எல்லாவற்றையும் கைவிட்டுவிட்டு, தேவனுடைய நடத்துதலைப் பின்பற்றினார்கள். அவர்கள் பயன்படுத்திக்கொண்டிருந்த கட்டிடம் மிகவும் பழையது. அந்தக் கட்டிடத்தில் இருந்த கொஞ்சமாவது மதிப் புள்ள தட்டுமுட்டுச் சாமான்களை, தாங்கள் விட்டுச்செல்லவிருந்த ஸ்தாபனத்துக்கு அவர்கள் அன்பளிப் பாகக் கொடுத்துவிட்டு, அந்தக் கட்டிடத்தைத் தீயணைப்புத் துறையினர் தங்கள் பயிற்சிக்காக எரிப்பதற்குக் கொடுத்தார்கள்.

ஆயினும், அக்கம்பக்கத்தார் தங்கள் வீடுகளுக்கு மிகவும் பக்கத்தில் இருந்த அந்தப் பெரிய கட்டிடத்தை எரித்து அழிப்பதற்கு ஆட்சேபம் தெரிவித்தார்கள். ஆகவே, முதலில் எரிக்காமல், அதைத் தகர்த்தார்கள். மிச்சம்மீதியிருந்த காணிக்கைப் பைகள்போன்ற சில தட்டுமுட்டுச் சாமான்களை நாட்டுப்புறத்துக்குக் கொண்டுபோய், அங்கு அவைகளை எரித்தார்கள். அதன்பின் ஒருநாள் சில சகோதரர்கள் சுருள் வாள்களு டன் கட்டிடத்திற்கு வந்தார்கள். அன்றைக்கு அவர்கள் பிரதானமான கூடும் அறைக்குள் நுழைந்து, “எங்கு ஆரம்பிக்க வேண்டும்?” என்று கேட்டார்கள். அவர்களெல்லாரும் ஒருவரையொருவர் நோக்கிப் பார்த்து, ஒரே நேரத்தில், “பிரசங்க பீடம்” என்று சொன்னார்கள். ஆர்வத்தோடு அவர்கள் அதை இரண்டு துண்டாக வெட்டினார்கள். பின்பு மேடையை வெட்டிச் சாய்த்தார்கள். கொஞ்சம் கொஞ்சமாக முழுக் கட்டிடத்தையும் இடித்துத்தள்ளி, அதைக் குப்பைமேட்டுக்குக் கொண்டுபோனார்கள்.

அங்கு இருந்த 20-30 பேரைச் சந்தித்தபோது, அவர்கள் சொன்ன கதையைக் கேட்டபோது, சாராளும் நானும் சிரித்தோம், அதிர்ச்சியில் எங்கள் தலைகளை ஆட்டினோம். விளையாட்டுத்தனமாகவோ, அல்லது ‘அமைப்புமுறையில்’ இருந்த மூர்க்கத்தினாலோ அவர்கள் இந்தக் காரியங்களைச் செய்யவில்லை. அவர்கள் அந்தக் காரியங்களைப் பயன்படுத்தினார்கள். ஆனால், அவைகள் தேவனுக்கு அருவருப்பாக மாறிவிட்டன என்றும், அவைகளை அகற்ற வேண்டும் என்று தேவன் விரும்பினார் என்றும் அவர்கள் உணர்ந்தார்கள். மற்றவர்களும் அதையே செய்ய வேண்டும் என்று அவர்கள் சொல்லவில்லை. அவர்கள் தொடர்ந்து சென்று, நிறுவனத்துக்குரிய எதுவும் இல்லாமல் எப்படி கிறிஸ்துவின் சரீரமாக இருக்க வேண்டும் என்று கற்றுக்கொண்டார்கள். கட்டிடத்தை ஒழித்துக்கட்டியபிறகு, சமுதாயத்தில் வியக்கத்தக்க கதவுகள் திறப் பதை அவர்கள் கண்டார்கள். இந்தச் சம்பவங்களுக்குப்பின், அந்தக் கிராமத்தில் இருந்த ஒருவர், இந்த ஸ்தாபனத்தின் ஒரு முந்நாள் தலைவரிடம் பேசிக்கொண்டிருந்தார். “இப்போது உண்மையாகவே என்னால் உங்களுடன் பேச முடியும் என்று நான் நினைக்கிறேன்,” என்று கூறினார். எந்த மக்களைச் சென்றடைய வேண்டும் என்று தேவன் அவர்களிடம் கேட்டாரோ, அவர்களைச் சென்றடையாதவாறு அவர்களுடைய மூட்டை முடிச்சுகள் எந்த அளவுக்கு அவர்களை விலக்கிச் சென்றுவிட்டது என்பதை அவர்கள் அதற்குமுன் அறியவில்லை.

ஏறக்குறைய இருபது ஆண்டுகளாக, அவர்கள் இந்தச் சமுதாயத்தில் தேவனுடைய மக்களாக ஒன்றாகச் சேர்ந்து தேவனுடைய ஜீவனில் செழித்தோங்கியிருக்கிறார்கள். எல்லாம் அவ்வளவு எளிதாக இருக்கவில்லை. அங்கு நிறைய சவால்கள் இருந்தன. ஆனால், கவட்டுக்கட்டையாக மாறிப்போன நிறுவனத்தை அகற்றிய பிறகு, தேவனுடன் தங்கள் உறவு எப்படி வளர ஆரம்பித்தது என்று அவர்களில் அநேகர் கூறினார்கள். இப்போது யாரும் எல்லாவற்றையும் திட்டமிட்டு அவர்கள் கையில் கொடுப்பதில்லை. எனவே, அவர்கள் தேவனுக்குச் செவிகொடுத்து, அவர் அவர்களுடைய இருதயத்தில் வைப்பதைச் செய்ய வேண்டியிருந்தது. இப்போது அவர்கள் தேவனுடன் சமாதானமாக வாழ்கிற மக்கள்; ஒருவரோடொருவர் ஐக்கியத்தில் வாழ்கிற மக்கள்; தங்கள் அமைப்புமுறையைப் பராமரிக்க வேண்டும் என்பதில் பரபரப்பாக இருந்தபோது ஒருபோதும் கிடைக்காத வழிகளில் அவிசுவாசிகளுக்குக் கிடைக்கக்கூடிய மக்கள். அந்த நாட்களிலிருந்து பிள்ளைகள் கூட தங்கள் பயணத்தில் தேவனில் வாழ்கிற, ஒருவரையொருவர் நேசிக்கிற எளிமையில் தொடர்ந்து செல்கிறார்கள். அவர்கள் எவ்வளவு மகிழ்ச்சியான எளிமையையும், வியக்கத்தக்க ஜீவனையும் சேர்ந்து பகிர்ந்துகொண்டிருக்கிறார்கள்!

அவர்கள் இந்தப் பகுதிகளில் ‘அந்தக் கூட்டம்’ என்று செல்லமாக அழைக்கப்படுகிறார்கள். கட்டிடத்தை இடித்துத் தரைமட்டமாக்கி, வாராவாரம் தவறாமல் கூடிவருவதை நிறுத்திவிட்ட அந்தக் கூட்டத்தைப்பற்றி

அங்கு வாழ்கிற எல்லாருக்கும் தெரியும். அவர்கள் பேரார்வம் கொண்ட விசுவாசிகளாக வாழ்கிறார்கள் என்றும் அந்த மக்களுக்குத் தெரியும். இப்போது பராமரிப்பதற்கு எந்த அமைப்புஇயந்திரமும் இல்லை. எனவே, குடும்பங்களுக்கும், அக்கம்பக்கத்தினருக்கும் உதவ அவர்கள் எளிதாகக் கிடைக்கிறார்கள்.

“கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும்; செத்ததேயாகில் மிகுந்த பலனைக் கொடுக்கும், ” (யோவான் 12:24). நாம் தக்கவைத்துக்கொள்ள வேண்டும் என்ற நாம் நினைக்கிற காரியங்களை நாம் இறுக்கமாகப் பிடித்துக்கொண்டிருக்கும்வரை, நாம் சாதாரணமாக தேவனில் வாழ்ந்து, அவருடைய வழிகளைப் பின்பற்றும்போது, ஒவ்வொரு நாளும் அவர் நமக்குமுன் வைக்கிற வியக்கத்தக்க வாசல்களைத் தவறவிட்டுவிடுவோம். எங்கெல்லாம் தேவன் நம்மை நடத்துகிறாரோ அங்கெல்லாம் பின்பற்றிச் செல்கையில், உண்மையான வாழ்க்கை உறுதியாகப் பற்றிக்கொள்வதில் அல்ல, மாறாக விட்டுவிடுவதில்தான் காணப்படுகிறது.